உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (22.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 326

ஓமந்தை சூனியப் பகுதியிலிருந்தே புலிகளின் குழு ஹெலியில் புறப்படும்?

திங்கள் அல்லது செவ்வாய் பயணம் பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம்

கொழும்பு,ஒக்ரோபர்22

ஜெனிவா பேச்சில் கலந்துகொள்ளவிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்குழு பெரும்பாலும் நாளை அல்லது மறுதினம் வன்னியில் இருந்து புறப்படவுள்ளது.

புலிகளின் பேச்சுக் குழுவினரை அரச விமானப்படையின் விசேட ஹெலி கொப்டர் ஒன்று வன்னியில் இருதரப்பினரதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட ஓமந்தை யுத்த சூனியப் பகுதியில் தரையிறங்கி ஏற்றிச்செல்லும் என்று தெரியவருகின்றது. இந்தப் பயண ஏற்பாடு தொடர்பாக அரசுத் தரப்பிடம் இருந்து உரிய உத்தரவாதம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

அரசு - புலிகள் இடையிலான உத்தேச பேச்சு ஜெனிவாவில் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு கட்டுநாயக்கா விமான நிலையம் வழியாகவே சுவிற்சர்லாந்துக்குச் செல்லவேண்டி உள்ளது.

புலிகளின் பிரதிநிதிகள் பெரும்பாலும் நாளை திங்கட்கிழமை அல்லது மறுநாள் செவ்வாய்க்கிழமை வன்னியில் இருந்து புறப்படுவர் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன.

இந்தமுறை புலிகளின் குழுவின் பயணத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு முந்திய பயணங்க

(08ஆம் பக்கம் பார்க்க)

பூவரசம்குளத்தில் பொலீஸ் காவலரண் மீது தாக்குதல்

வவுனியா,ஒக.22

வவுனியா, பூவரசம்குளம் பகுதியிலுள்ள பொலீஸாரின் முன்னணிக் காவலரண் மீது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பதுங்கு குழிகளைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்ட பொலீஸார் மீதே தாக்

(08ஆம் பக்கம் பார்க்க)

வந்தாறுமூலையில் கிரனேட் தாக்குதல்

மட்டக்களப்பு,ஒக.22

மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் நேற்று பிற்பகல் 12.55 மணியளவில் படையினர்மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் -

எனினும், படையினருக்கு எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்றும் ஊடக மத்திய நிலையம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் பேச்சுக் குழுவினருக்கு அரசு வழமைபோன்று பாதுகாப்பு வசதி செய்யும்

அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.22

ஜெனிவா பேச்சுக்காக சுவிற்சர்லாந்து செல்லும் விடுதலைப் புலிகளின் குழுவினருக்கு உரிய பயணப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

தேவையான பாதுகாப்பு வசதிகளை விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவினருக்கு அரசு வழங்கும் என்று பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்.

அரசு - புலிகள் இடையிலான உத்தேச சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற ஏற்பாடாகி இருப்பது தெரிந்ததே. இந்தப் பேச்சில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சியில் இருந்து புறப்படவுள்ள தங்களது பிரதிநிதிகள் குழுவின் பாதுகாப்பு குறித்து புலிகளின் தலைமைப்பீடம் ஆழ்ந்த கரிசனை கொண்டிருக்கிறது. இதனை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்தவாரம் தம்மைச் சந்தித்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஹன்சன் போவரிடம் தெரியப்படுத்தியிருந்தார்.

தங்களது பிரதிநிதிகளுக்குப் பயணப் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்படவேண்டும் - என்று அப்போது தமிழ்ச்செல்வன்போவரிடம் கோரி இருந்தார். இந்நிலையிலேயே புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு உரிய பயணப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அரசாங்கத் தரப்புப் பேச்சாளர் நேற்று தெரிவித்திருக்கிறார்.

''கடந்த ஆண்டுகளில் நாங்கள் அவர்களுக்கு (புலிகளுக்கு) பயணப் பாதுகாப்பை வழங்கியி

(08ஆம் பக்கம் பார்க்க)

தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு: இதுவே சமகாலத் தேவை என்கிறார் ரணில்

கொழும்பு,ஒக்.22

தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது என்பதே சமகாலத் தேவை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கதிர்காமம் கிரிவிகாரையின் பீடாதிபதி கலாநிதி அழுத் வெகபே சோபித தேரரை நேற்றுச்சந்தித்துப் பேச்சு நடத்திய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவருகிறது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதிலும் ஐ.தே.க. முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில்தான் தற்

(08ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறைக் கடலில் புலிகளின் படகுகளை தாக்கியழித்ததாக கடற்படைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.22

ஊர்காவற்றுறை கடற்படைத் தளத்தினுள் உட்புகமுனைந்த விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகளை கடற்படையினர் தாக்கி அழித்துள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் கடற்படையினரின் விசேட படகுப் படையணி ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை -

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து நேற்றிரவுவரை எதுவித தகவலும் வெளியிடப்படவில்லை.

மேஜர் ஜெனரல் சனத் கருணாரட்ண கிழக்குப் பிராந்திய தளபதியாக நியமனம்

கொழும்பு,ஒக்.22

கிழக்குப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான புதிய இராணுவக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சனத் கருணாரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் இந்த புதிய பதவியினை அவர் ஏற்றுக் கொள்வார் என்று இராணுவ ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலை

(08ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதி மக்களை நாட்டின் பிரசைகளாகக் கருதி அத்தியாவசிய தேவைகளை தாமதியாது வழங்குக

அகில இலங்கை இந்துமாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.22

வடபகுதியில் வாழும் மக்களையும் இந்த நாட்டின் பிரசைகளாகக் கருதி, ஏ-9 பாதையைத் தாமதமின்றித் திறந்து அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளைத் தாமதியாது வழங்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது அகில இலங்கை இந்து மாமன்றம். இம்மன்றம் விடுத்துள்ள பிரேரணை வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாட்டின் இந்து மக்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசும் மக்களாவர். அவர்கள் கடந்த சில மாதங்களாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். நடக்கவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிரந்த சமாதானத்தைக்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டிலுள்ள சகல குடும்பங்களுக்கும் அரிசி, சீனி பணத்துக்கு விநியோகம்

பங்கீட்டு அட்டையை சமர்ப்பித்து உடன்பெறலாம் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

குடாநாட்டில் உள்ள சகல குடும்பங்களுக்கும் உடனடியாக அரிசி, சீனி ஆகிய உணவுப்பொருள்கள் பணத்துக்கு விற்பனை செய்யப்படவுள்ளன. ஒன்று, இரண்டு அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பத்துக்கு இரண்டுகிலோ அரிசியும், ஒருகிலோ சீனியும்-

மூன்றும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பத்துக்கு மூன்று கிலோ அரிசியும், இரண்டு கிலோ சீனியும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி உணவு விற்பனை குறித்து சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும்-

பொதுமக்கள் தத்தமது கிளைகளில் பங்கீட்டு அட்டைகளைச் சமர்ப்பித்து மேற்படி உணவுப்பொருள்களை பணத்துக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்கனவே தமக்கு வழங்கப்பட்டு, இருப்பில் உள்ள உணவுப் பொருள்களில் இருந்து இந்த விநியோகத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் - அரச அதிபர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத் தோட்டத்தில் மக்கள் ஆர்வம்

வடமராட்சிப் பிரதேச மக்கள் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் பெரிய அளவில் நாட்டம் காட்டி வருகின்றனர்.

தற்போது குடாநாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வகையில் கீரை, பயறு, மரவள்ளி, பூசணி, வத்தாளை, போன்ற பயிர்களை வீடுகளில் நாட்டுவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திருத்தி வாசிக்கவும்

20.10.2006 "உதயன் பத்திரிகையின் 4ஆம் பக்கத்தில் பிரசுரமான அமரர் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் என்பவரின் முதலாமாண்டு நினைவஞ்சலி விளம்பரத்தில் தகவல் தந்தவர்களில் மருமக்கள் என்பதற்குப் பதிலாக மருமகள் என்று தவறுதலாக பிரசுர மாகி விட்டது. திருத்தி வாசிக்கவும்.

திருட்டுச் சம்பவத்தை அடுத்து கிணற்றில் வீழ்ந்து மரணமானவர் குறித்து இன்று விசேட விசாரணை

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ். கஸ்தூரியார் வீதியில் கடந்த வியாழன் நள்ளிரவு இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களை அடுத்து தப்பி ஓடி கிணற்றில் வீழ்ந்து மரணமானவர் தொடர்பாக யாழ். ஆஸ்பத்திரியில் இன்று விசேட விசாரணை நடைபெறவுள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பாக முரண்பாடான தகவல்கள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து விசேட விசாரணை இன்று இடம் பெறவுள்ளது.

உயிரிழந்தவர் வசமிருந்து மீட்கப்பட்ட கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையில் 'எஸ்.குகநாதன், 9, பழம் றோட், அரசடி வீதி, யாழ்ப்பாணம்' என்ற விலாசம் காணப்பட்டது.

கோயில் வீதியில் வசிக்கும் செல்வம் வசந்தகுமாரி என்னும் பெண் உயிரிழந்தவர் தமது மகன் சஞ்சீவ் எனப் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

முரண்பாடான தகவல்கள் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இன்று சட்ட வைத்திய அதிகாரி முன் விசாரணை நடத்த நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (1)

அமைதிப்படையால் கொல்லப்பட்ட

யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்களின் 19ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

இந்திய அமைதிகாக்கும் படையினரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்ட வைத்தியசாலை ஊழியர்களின் 19ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வைத்தியசாலை மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஊழியர் தொழிற் சங்கத் தலைவர் பீரிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஞாபகார்த்த நினைவுச்சுடரை வைத்தியசாலை பதில் பணிப்பாளர் ஆர்.இரத்தினசிங்கம் ஏற்றிவைத்து உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்தார். அதன்பின்னர் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், ஊழியர்கள் நினைவுச் சுடர்களை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து இறை வழிபாடு இடம்பெற்றது. நினைவஞ்சலி உரைகளை வைத்தியசாலை பதில் பணிப்பாளர் ஆர்.இரத்தினசிங்கம், நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன், ஊழியர் மேற்பார்வை அலுவலர் கு.கைலாயபிள்ளை, தாதிய உத்தியோகத்தர் திருமதி க.அருட்செல்வி ஆகியோர் நிகழ்த்தினர். (202-68-111)

செயல்முறைப் பரீட்சை நிலையம் மாற்றம்

தென்மராட்சி,ஒக்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த சங்கீத பாட கணிப் பீட்டுச் செயன்முறைப் பரீட்சைகள் பின்வரும் நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் நிலையத்தில் நடைபெறவிருந்த பரீட்சைகள மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திலும் -

எதிர்வரும் 24, 25, 26 ஆகிய திகதிகளில் வரணி மகாவித்தியாலய மாணவர்களுக்கு நடைபெறவிருந்த பரீட்சைகள் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை - இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேச பாடசாலைகளில் கற்கும் தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கு வடமராட்சியில் உள்ள பாடசாலையில் கணிப் பீட்டு செயன்முறைப் பரீட்சைகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதுவரை மேற்படி பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் உடனடியாக தத்தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுநீளத் திரைப்படத்துக்கான கதை வினண்ணப்பம் கோரல்

SCRIPTNETSL

இலங்கையில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறைகளில் ScriptNetSL செலுத்தி வரும் அர்ப்பணிப்புப் பணிகளில் ஒரு பகுதியாக முழுநீளத் திரைப்படத்துக்கான திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்கிறது.

இத் திரைப்படத் திட்டத்திற்காக நாடளாவிய ரீதியில் எழுத்தாளர்களிடமிருந்து கதைகள் கோரப்படுகின்றன. தெரிவுசெய்யப்படும் சிறந்த பத்துக்கதைகளின் எழுத்தாளர்களுக்கு இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை ஏற்பாடு செய்யப்படுவதுடன் அவர்கள் தமது திரைக்கதைகளை எழுதுவதற்கான ஊக்குவிப்பும் பணமும் வழங்கப்படும்.

பிரித்தானிய திரைப்படக் கல்லூரியிலிருந்து வரவழைக்கப்படும் பயிற்றுனர்களினால் இரண்டு வாரப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்படுவதுடன் இலங்கை இந்தியத் திரைப்படத் துறையைச் சார்ந்தவர்களாலும் ஆலோசனைகளும், பயிற்சிகளும் வழங்கப்படும்.

கதை (Treatment) வினண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 03-11-2006

குறிப்பு:
ஒக்டோபர் 26,27 ஆகியத் திகதிகளில் எமது ScriptNet அலுவலகத்தில் கதை உருவாக்கத்திற்கான ஆலோசனை அமர்வு நடைபெறவுள்ளது. பிரித்தானியாவில் இருந்து வருகைத்தந்திருக்கும் திரைக்கதை எழுத்து ஆலோசகர் Ian Masters அவர்கள் இந்த அமர்வினை வழிப்படுத்தி ஆலோசனை வழங்கவுள்ளார்.

கதைகளை வினண்ணப்பிப்போர் முதலில் ஆலோசனை தேவைப்படின் ஒக்டோபர் 25ம் திகதிக்கு முன் எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு முற்பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் கதை ஆலோசனை அமர்வில் பங்குக்கொள்ள முடியும்.

Project Co-ordinator,
Feature Films Project,
ScriptNetSL,
121, Hampden Lane, Colombo-06.
Tel : 5624300 E-mail : scriptnetsl@sltnet.lk

ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 02 1939

விண்ணில் 02 11 2005

இரத்தினசிங்கம் வள்ளிப்பிள்ளை

எங்கள் குடும்ப விளக்கு அணைந்தாலும்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது — என்றும்
பிரகாசித்துக்கொண்டிருக்கும் எங்கள் தெய்வமே!

(54573)

சுதுமலை தெற்கு, மானிப்பாய். பிரிவால் துயருறும்: மருமக்கள்.

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தப்பிள்ளை வல்லிபுரம்

திதி: பிரதமை
22.10.2006

தோற்றம் 24.11.1910 மறைவு 20.10.1998

அன்னை தந்தை தெய்வமாக எம்மை அரவணைத்த
அவனியிலே உயரவைத்த அன்பு அப்பாவே!
எட்டு ஆண்டுகள் ஆயினும் எம் ஏக்கம் தீரவில்லை.
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பாடசாலையடி
நவக்கிரி, புத்தூர். (54562) - குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

ஞானப்பிரகாசம் சிறில்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சிறில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோ.ஞானப்பிரகாசம் - மேரி அக்னஸ் தம்பதியரின் அன்பு மகனும் லில்லிஅக்னசின் அன்புக் கணவரும் றிச்சி(ஜேர்மனி), ஐறீன் அன்ரன் (ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திலகசோதி (ஜேர்மனி), யோ.அன்ரன்(ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்தனா, கீர்த்தாஞ்சன்,ஜூலியா, பெனோ ஆகியோரின் அன்புப் பேரனும் அகஸ்ரீன் (கனடா), அருளானந்தம்(கியூடெக், யாழ்ப்பாணம்),விக்ரர், பேணாட்(பிரான்ஸ்), பற்றிக் (லண்டன்), செல்வரெட்ணம், நவரெட்ணம்(ஜேர்மனி),தர்மரெட்ணம், மரியநாயகம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 859/10, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து 23.10.2006 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

859/10, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (54580)

தகவல்:
யோ.அன்ரன்(மருமகன்).

STUDY IN SINGAPORE

Visa Guaranteed
Entry into one of eleevn excellent UK universities.

G.C.E.(O/L) முடித்தவர்கள் யாவரும் வினண்ணப்பிக்கலாம்

Singapore இல் இருந்து முதல் முறையாக UK பல்கலைக்கழகங்களுக்கான NCUK பாடநெறி அறிமுகம்

- Dip in Hotel Mgmt (12 Months)
  (6 months studies, 6 months on job training)
  (on job training available @ Dubai,New Zealand,Brunei & Singapore)
- Dip in Multimedia(1 Year)
- Advance Dip in travel and tourism (1 Year)
- Dip in Information Technology
- Dip in Health Care Program
- Dip in Business Manegment

We will give offer letter directly from Singapore to ease your travel arrangements.

ACCA CAT

Sanjeev 0777113494 (Student From FTMS Singapore)
Venukanan 0773276308 (Managing Director VISION Academy)
Vaheesan 0775327705 (Student From AEC Singapore)

AEC BUSINESS SCHOOL
141 Market Street #13-00 AEC Centre. Singapore 048944
Tel: 6222-3500 Fax: 6324-1586
Email: knowledge@aec.edu.sg

VISION ACADEMY OF COMPUTER STUDIES
No: 10-1/1, 36th Lane, Wellawatta, Colombo-06.
Tel: +94 112553557, Fax: +94 112362115

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பற்றாக்குறை = போசாக்கின்மை: ஆரோக்கியமற்ற சந்ததியை உருவாக்கும்!

போரின் கொடூர முகங்கள் பல. அவற்றில் சில நேரடியாகத் தெரியாவிடினும், தொலைநோக்கில் பாரிய தீய விளைவுகளை ஏற்படுத்தவல்லன. அவ்வகையில் போர்க் காலத்தில் ஏற்படும் உணவுத் தட்டுப்பாடு, அதன் விளைவான பற்றாக்குறை காரணமாக உண்டாகும் போசாக்கின்மை, நீண்டகால நோக்கில் சமுதாயத்திற்கும் பாரிய தாக்கங்களைக் கொணர்ந்து ஆரோக்கியமற்ற, அறிவு விருத்தி குறைந்த ஒரு சந்ததியை உருவாக்கும் ஆபத்து உள்ளது.

போசாக்கின்மை காரணமாக அதிகளவில் பாதிக்கப்படுவது குழந்தைகளும் கருவிலிருக்கும் சிசுக்களுமே. கடந்த வருடம் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்வொன்றில் 55-60 வீதமான குழந்தைகளும் கர்ப்பிணித் தாய்மாரும் போசர்க்கின்மையுற்று இருப்பதாக அறியப்பட்டது. இந்நிலை தற்போதைய சூழலில் மேலும் மோசமாகியிருக்கக் கூடும். குழந்தைகளின் மூளை வளர்ச்சி 8 வயதுவரை நடைபெறுவதாகும். இக்காலத்தில் ஏற்படும் போசாக்கின்மை அறிவுத் திறனைப் பாதிக்கும். கடந்த காலங்களில் வடபகுதியின் கல்வித்தர வீழ்ச்சிக்கு இதுவுமொரு காரணியாகலாம்.

குழந்தைகளின் போசாக்கின் அளவு மிக மோசமாகக் குறைவடைந்தால் குவாசியோக்கர், மரஸ்மஸ் போன்ற கடுமையான நோய்கள் ஏற்படும். ஆனால், பெரும்பாலான குழந்தைகளுக்கு அறிகுறிகள் வெளித் தெரியாவிடினும் நீண்டகால நோக்கில் உடல் மற்றும் அறிவு வளர்ச்சி குன்றிக் காணப்படுவர். இவர்கள் இலகுவில் பல்வேறு நோய்த் தொற்றுகளுக்கு ஆளாவதுடன் பொதுவில் சோர்வுற்று இருப்பர்.

கடுமையான போசாக்கின்மை ஏற்படின், அதாவது எல்லாவகையான உணவுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இருந்தால் மரஸ்மஸ் எனப்படும் நோய் உண்டாகும். இது பொதுவாக 0-3 வயது வரையான குழந்தைகளுக்கு ஏற்படும். அப்போது குழந்தைகளின் முகம் சுருங்கி, தசைகள் அற்று எலும்பும் தோலுமாகக்

காணப்படுவர். இக்குழந்தைகளுக்கு எதிர்ப்புச் சக்தி குறைவதால் இலகுவில் தொற்று நோய்கள், வயிற்றோட்டம் என்பன ஏற்பட்டு உடல் நிலை மோசமாகலாம். ஆரம்ப காலத்தில் குழந்தை கடும் பசியுடனிருப்

இளவயதிலேயே சலரோகம் உயர்குருதி அழுக்கம் அறிவு வளர்ச்சியில் மந்தம்

பினும் பின்னர் உணவை வெறுக்கும் நிலைக்கு மாறும். இந்நிலைக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அத்தியாவசியமாகும்.

புரதக் குறைவால் உண்டாகும் குவாசியோக்கர் நோய்

இரண்டாவது வகையான போசாக்கின்மை நோய் குவாசியோக்கர் ஆகும். இது புரதச் சத்துக் குறைபாட்டால் ஏற்படுவதாகும். பாற்பொருட்கள், இறைச்சி, மீன், பருப்பு போன்ற புரத உணவுகள் போதியளவில் உட்கொள்ளப்படாமல் மரவள்ளி மாப்பொருள்களைக் கொண்டு பசியைத் தணிப்பது (உ+ம: பாணும் வாழைப்பழமும்) இந்நிலைக்கு இட்டுச் செல்லக்கூடும். குவாசியோக்கர் நோய் பொதுவில் 1-4 வயது வரையான குழந்தைகளைப் பாதிக்கும். இது வயது வந்தவர்களையும் கூட குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாதிக்கக்கூடும். இக்குழந்தைகள் வளர்ச்சி குன்றி மந்தமாக உடல் வீங்கிக் காணப்படுவர்.

குழந்தை சோர்வாகவும், சூழலில் அக்கறையற்றும் காணப்படும். இலகுவில் தொற்று நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகும். தோல்கள் தடித்தும் சிவந்தும் காணப்படும். இக்குழந்தைகளையும் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை செய்வது அவசியம்.

சி.நவநீதன்
மகப்பேற்று நிபுணர்.
யாழ்.போதனா வைத்தியசாலை.

சாதாரணமாக 3 வயதுக் குழந்தை ஒன்றுக்குச் சராசரியாக 1,100 கலோரி சக்தி தேவைப்படுகிறது. அது பின்வருமாறு பெறப்படுகிறது.

உணவு	போசாக்கான உணவு உட்கொள்ளும் குழந்தை			உணவுத்தட்டுப்பாடு நிலையிலுள்ள குழந்தை		
	நிறை	கலோரி	புரதம்	நிறை	கலோரி	புரதம்
தானிய வகை	150g	475	15	150g	475	15
பருப்பு வகை	50g	210	20	25g	105	10
மரக்கறி	30g	} 60		30g	} 60	
பழங்கள்	50g			50g		
பால்	200g	130	06	-	-	-
மீன்/ இறைச்சி/ முட்டை	30g	50	06	-	-	-
சீனி	30	120	-	15	60	-
		1045	47		700	25

எனவே உணவுத் தட்டுப்பாட்டிலிருக்கும் குழந்தையின் கலோரியின் அளவு 300 குறைவாகவும், புரதத்தின் அளவு 12 கிராம் குறைவாகவும் உள்ளது. இந்நிலை நிடிக்குமாயின் போசாக்கின்மை நோய் பெரியளவில் ஏற்படும் ஆபத்து உள்ளது.

இதே போல் கர்ப்பிணித் தாய்மார் போதிய அளவு உணவு பெற முடியாதிருப்பின், அது பிறக்கும் குழந்தையின்

இது ஒரு தூரநோக்கு

நிறையையும் அதன் வளர்ச்சியையும் பெருமளவில் பாதிக்கும்.

சிசுக்களின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் மீன்களிலிருந்த இலகுவாக கிடைக்கின்றன. நெதர்லாந்தில் அண்மையில் வெளியிடப்பட்ட ஆய்வென்றின்படி மீன் உணவு நிறை குறைவான குழந்தைகளின் பிறப்பை அதிக வீதத்தில் குறைக்க உதவுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதாவது மீன் உணவின் மூலம் புரதச்சத்தைப் பெறும் தாய்மார் அது இல்லாதவிடத்து நிறை குறைந்த குழந்தைகளை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அண்மையில் பார்கர் (BARKER) என்ற விஞ்ஞானி வெளியிட்ட தகவல் மேலும் வயிற்றில் புளியைக் கரைப்பதாக உள்ளது. அதாவது கருவி லிருக்கும் சிசுவிற்கு போசாக்கின்மை ஏற்படுமாயின் பிற்காலத்தில் இக்குழந்தைகள் வளர்ந்ததும் சலரோகம், உயர் குருதி அழுக்கம் மற்றும் அறிவு வளர்ச்சியில் மந்தம் போன்ற பிரச்சினைகள் எழும் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே போசாக்கின்மை தகுந்த காலத்தில் தவிர்க்கப்படாவிடின் நீண்டகால விளைவுகள் தவிர்க்கப்பட முடியாதவையாகும்.

★

இடம் பெயர்ந்த மாணவர் நலன் கருதி

தீவகப் பாடசாலைகளை நகரப்பகுதியில் ஆரம்பிக்க விரும்பின் அனுமதிக்கப்படும்

வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.22

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்கு தீவகப் பாடசாலைகளை யாழ். நகரப்பகுதியில் இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிபர்கள் முன்வந்தால் அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு தீவக பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆர். இராதாகிருஷ்ணன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டி பராசத்தி வித்தியாலயம், மண்கும்பான் அ.த.க பாடசாலை மற்றும் மண்டைதீவு றோ.க. பாடசாலை ஆகியவற்றில் மாணவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர். இவர்கள் யாழ். நகரிலுள்ள தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்கள் முன்வர வேண்டும். அவர்கள் இடத்தை தெரிவு செய்து தெரியப்படுத்தினால் அனுமதி யும் தளபாட வசதிகளும் பெற்றுத்தரப்படும்.

யாழ். நகரப்பாடசாலைகளிலேயோ அல்லது கல்விநிறுவனங்களிலோ அல்லது பிரத்தியேகமான இடங்களிலோ தனியாக அல்லது ஒன்றிணைந்து பாடசாலைகளை நடத்தமுடியும்.

இம்மாணவர்களை நகரப்பாடசாலைகளில் தனிப்பட்ட முறையில் இணைப்பதற்கு சில நிர்வாக சிக்கல்கள் உள்ளன -என்றார் அவர்.

(1-202-88)

நலன்புரி நிலையப் பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

தென்மராட்சி,ஒக்.22

தென்மராட்சிப்பகுதியில் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களாக இயங்கும் மூன்று பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடு நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அல்லாரை அ.த.க பாடசாலை , மந்துவில் றோமன் கத்தோலிக்கப்பாட்சாலை, மிருசுவில் வடக்கு அ.த.க பாடசாலை ஆகியவை நலன்புரி நிலையங்களாக இயங்கிய போதிலும், அங்கு தங்கியுள்ளவர்களின் ஒத்துளைப்புடன் பாடசாலைகள் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மழை காலம் ஆரம்பித்துள்ளதால் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதி இப்பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகள் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202)

மண்கும்பானில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கிறது

நல்லூர்,ஒக்.22

வேலணை, மண்கும்பான் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். தினமும் உழவு இயந்திரங்கள் மூலம் மணல் அகழ்ந்து எடுத்துச் செல்லப்படுவதா கவும் - அவர்கள் தெரிவித்தனர்.

மண்கும்பான் பகுதியில் ஒரு சில குடும்பங்களைத் தவிர ஏனையோர் இடம் பெயர்ந்து விட்டனர் என்றும் - இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத் தும் சிலர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடு படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-111)

சோபை இழந்த நிலையில் தீபாவளிக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்.குடாநாட்டில் நேற்றைய தினம் தீபாவளித் திருநாள் சோபையிழந்து காணப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளமை, ஆ[illegible] கள் மற்றும் உண[illegible] குறை போன்ற காரணங்களினால் இம்முறை தீபாவளி கொண்டாட்டங்கள் ஏனைய வருடங்களைப் போன்று கொண்டாடப்படவில்லை.

இதேவேளை - நேற்றும் யாழ்.நகரப் பகுதியின் ஒரு சில கடைகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து உணவுப் பொருள்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு இருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(68-111)

செயலமர்வுகள்

தென்மராட்சி, ஒக்.22

பாடசாலையில் தரம் 6, 10 ஆகிய வகுப்புகளில் அடுத்த வருடம் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பாடத்திட்டத்திற்கமைய இவ்வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இருநாள் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இன்றும் நாளையும் கணித பாட ஆசிரியர்களுக்கும்- இன்றும் நாளை மறுதினமும் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கும்- செயலமர்வுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலையக்கல்விப்பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)

தற்காலிக வீடுகள் அகற்றப்படுகின்றன

உடுப்பிட்டி, ஒக்.22

வல்லையில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்காக தொண்டர் நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக வீடுகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

அந்த வீடுகளின் உரிமையாளர்களே வீடுகளை அகற்றிவருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள போர்க்காலச் சூழல் தம்மை அச்சுறுத்துவதாகவும் தாம் பாதுகாப்பான வேறு பகுதிகளில் வீடுகளை அமைக்கப் போவதாகவும், தெரிவித்து கிராம சேவகரின் அனுமதியுடன் மேற்படி வீடுகளை அவர்களை அகற்றிவருகின்றனர். (1-202-155)

கால்நடைகள் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சி கிழக்கு, ஒக்.22

வரணிப்பிரதேசத்தில் கால்நடைகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இப்பிரதேச மக்கள் பலர் இடம் பெயர்ந்த நிலையில் அவர்களின் கால்நடைகள் பல அனாதரவாக கைவிடப்பட்டுள்ளன. மீக்கள் இல்லாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திருடர்கள் மாடுகளை பிடித்து இறைச்சிக்காகக் கொண்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட மாணவர்களுக்கு
சர்வதேச ரீதியிலான
வங்கியியல் கற்கைநெறிகள்

B.Sc.(Hons) Degree &ACIB
DBF, ACBF, CBF (CIB/IBSL)

University Of Manchester (UMIST)
Chartered Institute Of Bankers, London (CIB)
Institute Of Bankers Of Sri Lanka (IBSL)

Five (5) Internationally recognized professional Qualifications over 3 years **Wish To Register?**

Register With the IBSL Through **Jaffna College**

Do you Have G.C.E.(A/L) 2 passes and G.C.E.(O/L) 6 PASSES WITH 5 credits including Maths /Commerce & Accounts And Language (Tamil / English)

B.Sc (Hons) (UMIST)with ACIB (London) (6 Months)

CBF Certificate in banking & Finance (6 months)

ACBF Advanced certificate in banking & finance (6 Months)

DBF Diploma In Banking & Finance (6 Months)

Exams Held Twice a year March & September

பதிவுகளை 30-10-2006 முன் மேற்கொள்ளவும்

INQUIRIES/ REGISTRATION
DIRECTOR
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464, Hospital Road, Jaffna

லயன்ஸ் கழகம் உதவி

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள விழிப்புலனற்றோருக்கு அன்பளிப்புகளை வழங்கியுள்ளனர். கழக அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் விழிப்புலன் அற்றோருக்கு வெள்ளைப் பிரம்புகளும் உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன. (202)

நாய் விற்பனைக்கு

ஒரு வயதுடைய **Dobermann -Pincher** ஆண் நாய் **(Pedigree Holland)** விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: எஸ்.தியாகராசா, 152/2 ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

CB
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

Diploma in Auto CAD

Speed Batch Only 25 Hours
- Start on - 22.10.2006
- Days - Sat, Sun,Wed
- Time - 3.00 p.m

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்!

தவறிவிட்டது

வே.கதிர்காமநாதன் என்பவரது கோப்பாய் செயலக பிரிவில் அடங்கிய நிவாரண அட்டை, உணவு முத்திரை(இல.15062), 5 படங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய **Bag** 18.10.2006 அன்று கச்சேரி-நல்லூர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே.கதிர்காமநாதன், பேபி நீட்ஸ், 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளவும். (54549)

நீரிழிவு DIABETES

- சிறுகுறிஞ்சாப் பவுடர் **Gymnema Powder**
- 2 டி கோலா 2 **D cola**
  தலைமயிர் நரைத்தல்/உதிர்தல் **Hair Greying/ falling**
- பிபிஜி கெயார் ஒயில் **BBG Hair Oil**
  திராட்சை **Grapes**
- திராட்சை வைன் **Grape wine**
- திராட்சை ரசம் **Grape juice** (54372)
  வினாகிரி **Vineger**
- இயற்கை அரிசி வினாகிரி **Natural rice vineger**
  அச்சர மென்பானங்கள் **Achcha Soft drinks**

BIO TEC ORIENT
131 / 2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

"சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள்" (சகரியா,8:19)

அடைக்கல கூடார சபை, துணவி வட்டுக்கோட்டை

10ஆவது நிறைவு ஆண்டு நன்றி, துதி-ஆராதனை காலை 10 மணிக்கு நடைபெறும்.
இம்மட்டும் உதவிய தேவனுக்கு நன்றி.
ஸ்தோத்திரம் கூறுகின்றோம்.
(காலம்: 22.10.2006 காலை 10 மணி)

தகவல்: சபை தலைமைப் போதகர்
(ஸ்தாபகர்)
S.J.பத்திநாதன்
(54560) **சபை ஊழியர்கள், சபை மக்கள்.**

நினைவஞ்சலி

ஈராண்டு ஓராண்டு

அமரர் **சிற்றம்பலம் கிருஷ்ணபிள்ளை**
13✱04✱1946 மலர்வு
14✱11✱2004 உதிர்வு

அமரர் **கிருஷ்ணபிள்ளை வசந்தாதேவி**
17✱07✱1945 மலர்வு
02✱11✱2005 உதிர்வு

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
பாரிலே எமைப் பெற்று வாழவைத்த தெய்வங்களே!
பாதியிலே எமை விட்டுச் சென்றதேன்?
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயர்

உங்கள் நினைவில் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தீரை, கரவெட்டி மத்தி, கரவெட்டி. (54546)

ஆறாத்துயருடன் ஆறாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 05 - 11 - 1968

பரமனின் பிடியில் 27 - 10 - 2000

அமரர் **திரவியம் விஷியதரன்(விஷி)**

பண்பில் நிறைந்த எங்கள் உயிரே விஷி!
பாசத்தைக் காட்டி மகிழ வைத்தீரே!
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறிடுமோ எம் துயரம்?

உம் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

நிரந்தர முகவரி - நாவற்குழி.
தற்காலிக முகவரி - 38/9, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(54451)

உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

WORLD RECOGNIZED DEGREES

BSc MSc PhD



இன்று விண்ணப்பித்து - அடுத்தவாரம் புறப்படுங்கள்
அனுமதிக்கான தொடர்புகளுக்கு: 0773017883

71 சிறப்பம்சங்கள்: தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் இயந்திர மனிதவியல், மோட்டார் வாகனப் பொறியியல் இயந்திர தொழில்நுட்பம், தொலைபேசி அமைப்பியல், போக்குவரவு பொறியியல், சிவில் மற்றும் இயந்திர பொறியியல், சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம், கட்டடக் கலை, சர்வதேச உறவுகள் ஆகியவை உள்ளடங்கும்.

தேசிய தொழில்நுட்ப - பல்கலைக்கழகம்-பெலாரஸ்

கிழக்கு ஐரோப்பாவில் உலகத் தரத்திலான கல்வியை அனுபவியுங்கள் - பெலாரஸ் ஒரு பல்லினங்களைக் கொண்ட நாடு ஜேர்மனி, போலந்து, அஸ்ரியா ஆகியவைகளால் சூழப்பட்ட ஐரோப்பிய கலாசாரங்கள் தோய்ந்த வளம் மிக்க பாரம்பரியங்கள் தொழில்நுட்பங்கள் நிறைந்தது.
84 நாடுகளுக்கு மேற்பட்ட நாடுகளின் வெளிநாட்டு மாணவர்களுடன் வெவ்வேறு வாழ்க்கை முறைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளுங்கள். ஏற்கனவே கற்றுக் கொண்டிருக்கும் - மற்றும் உலகம் முழுவதிலும் உயர் வரிசைகளில் தொழில்புரியும் இலங்கையர்களான நூற்றுக் மேற்பட்ட பட்டதாரிகளைச் சந்திக்கலாம்.

- ★ பட்டம் பெற்றதன் பின்னர் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம் பெயரலாம்.
- ★ உள்வாங்கலும் விசாவும் உத்தரவாதம்.
- ★ 2006 நவம்பர் 6ஆம் திகதியுடன் உள்வாங்கல் முற்றுப்பெறும்.

PATHE ACADEMY
Overseas Students Placement department
No.37, School Lane (Entrance Duplication Rd) Colombo 03
Tel: 5377752, 2502012, 2591271
(C/51196)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

www.slt.lk

வெளிநாட்டுக்கு கதைப்பதற்கு MAX வாசியானது

ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா உட்பட 68 நாடுகளுக்கு
நிமிடத்திற்கு ரூபா. 10/-

தெற்காசியா மற்றும் மத்திய கிழக்கு உட்பட 148 நாடுகளுக்கு
நிமிடத்திற்கு ரூபா. 25/-

ஒரு நிமிடத்திற்கு ரூபா 10/-

மொபைல் தொலைபேசிக்கு ஒரு நிமிடத்திற்கு ரூபா 18/-

அமெரிக்கன் சமோவா	ஜப்பான்
ஆஜென்ரினா	குவைத்
அவுஸ்திரேலியா	கிர்கிஸ்தான்
ஆஸ்திரியா	லாவோஸ்
பங்களாதேஷ்	லக்ஸம்பேர்க்
பெல்ஜியம்	மக்காவூ
பெனின்	மலாவி
பேர்முடா	மலேசியா
பஹாமாஸ்	மரீனா தீவுகள்
பிறேசில்	மொரீசியஸ்
புறூணை	மெக்சிக்கோ
பல்கேரியா	மொங்கோலியா
புறுண்டி	நெதர்லாந்து
கனடா	நியூசிலாந்து / சதம் தீவுகள்
சிலி	நோர்வே
சீனா	போலந்து
கொலம்பியா	போர்த்துக்கல்
கோஸ்ராறிக்கா	ருஷ்யா
குரேஷியா	சான்மரினோ
சைப்பிரஸ்	சிங்கப்பூர்
செக் குடியரசு	தென் ஆபிரிக்கா
டென்மார்க்	தென் கொரியா
இஸ்தோனியா	ஸ்பானியா
பின்லாந்து	சுவீடன்
பிரான்ஸ்	தைவான்
ஜேர்மனி	தாய்லாந்து
கிறீஸ்	கிரேக்கம்
குவாம்	உக்ரேன்
ஹொங்கொங்	ஐக்கிய இராச்சியம்
ஹங்கேரி	யூ எஸ் ஏ
ஐஸ்லாந்து	யூ எஸ் ஏ - அலாஸ்கா
இந்தோனேஷியா	உஸ்பெஸ்கிஸ்தான்
அயர்லாந்து	வெனிசுவெலா - கார்கஸ்
இஸ்ரேல்	வேர்ஜின் தீவுகள் (யூஎஸ்)

ஒரு நிமிடத்திற்கு ரூபா 25/-

மொபைல் தொலைபேசிக்கு ஒரு நிமிடத்திற்கு ரூபா 35/-

ஆப்கானிஸ்தான்	எல் சல்வடோர்	லிபியா	சாவோ ரோம் அன்ட் பிரின்சிபி
அல்பானியா	ஈக்குவட்டோரியல் கினியா	லிச்ரென்ஸ்ரெயின்	சவுதி அரேபியா
அல்ஜிரியா	எரித்திரியா	லித்துவேனியா	செனீகல்
அன்டோரா	எத்தியோப்பியா	மெசிடோனியா	சேர்பியா அன்ட் மொண்டி நீக்ரோ
அங்கோலா	போக்லாந்து தீவுகள	மடகஸ்கார	சீசெல்லீஸ
அங்கிலா	பாரோ தீவுகள்	மாலை தீவுகள்	சீராலியோன்
அந்தாட்டிக்கா	பிஜி	மாலி	சிலவாக்கியா
அன்டிகுவா அன்ட் பார்புடா	பிரெஞ் கயானா	மோல்டா	சிலோவீனியா
ஆர்மேனியா	பிரெஞ் பொலினிசியா (தாஹிட்டி)	மார்வல் தீவுகள்	சொலமன் தீவுகள்
ஆறுபா	காபோன்	மொரித்தானியா	சோமாலியா
அசெர்பைஜன்	காம்பியா	மக்ரோனிசியா	சென்ற் ஹெலனா
பஹ்ரைன்	ஜோர்ஜியா	மொல்டோவா	சென்ற் கிட்ஸ் அன்ட் நெவிஸ்
பார்படோஸ்	கானா	மொனாகோ	சென்ற் லூசியா
பெலாறஸ	ஜிப்ராலடர்	மொரோக்கோ	சென்ற் வின்சென்ற் & கிரெனடினெஸ
பெலிசி	கிறீன்லாந்து	மொசாம்பிக்	சூடான்
பூட்டான்	கிறேனாட	மியன்மார்	சூரினாம்
பொலிவியா	குவாடிலொப்பி	நமிபியா	சுவாசிலாந்து
பொஸ்னியா ஹேர்சிகோவினா	கௌத்தமாலா	நௌரு	சுவிற்சாலாந்து
பொஸ்வானா	கைனியா பிஸ்ஸாயூ	நேபாளம்	சிரியா
பிரிட்டிஸ் வேர்ஜின் தீவுகள்	கயானா	நெதர்லாந்து அன்ரைல்ஸ்	தாஜிகிஸ்தான்
புர்கினா பாஸோ	ஹைய்டி	நியூ கலிடோனியா	தன்சானியா/சான்சியார்
கம்போடியா	கொண்டுராஸ்	நிக்கரக்குவா	ரூகோ
கமரூன்	இந்தியா	நைகர்	றினிடாட் & டுபேகோ
கேப் வேர்டி	ஈரான்	நைஜீரியா	ரியூனிசியா
கேமான் தீவுகள்	ஈராக்	நையூ தீவுகள்	ருக்மெனிஸ்தான்
மத்திய ஆபிரிக்கன் குடியரசு	இத்தாலி	ஓமான்	ரூக்ஸ் அன்ட் கைக்கோஸ் இஸ
சாட்	ஜமைக்கோஸ்ட்	பாகிஸ்தான்	ருவாலு
கொமோரோஸ் / மயோட்டி	ஜமேய்க்கா	பாலாயூ	யூஏஈ
குக் தீவுகள்	ஜோர்டான்	பனாமா	உகண்டா
கியூபா	கசகிஸ்தான்	பப்புவா நியூகினி	உருகுவே
கொங்கோ குடியரசு	கென்யா	பரக்குவே	வனுவட்டு
தியாகோ கார்ஷியா	கிரிப்டி	பேரு	வியட்நாம்
டிஜிபோடி	வடகொரியா	பிலிப்பைன்ஸ்	வல்லிஸ் அன்ட் போட்டுனா
டொமினிக்கன் குடியரசு	லத்வியா	கட்டார்	வெஸ்ரேன் சாமோ
கிழக்கு திமோர்	லெபனான்	றீயூனியன்	யேமன் அரபுக் குடியரசு
ஈக்குவடோர்	லிசோதோ	ரோமேனியா	ஸம்பியா
எகிப்து	லைபீரியா	ருவாண்டா	ஸிம்பாவே

Sri Lanka Telecom

SLT MAXtalk பிறீபெயிட் காட் - இப்பொழுது எந்தவொரு நாட்டுக்கும் .
குறைவான கட்டணத்தில் சர்வதேச அழைப்புகள்.

- செக்கன் அடிப்படையில் கட்டணம்
- மறைமுக கட்டணம் இல்லை
- ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் அதியுயர் தொழிநுட்பமும், நம்பிக்கையும் கொண்டது.

ஹொட்லைன் - 011 2555555

SLT MAXtalk
சர்வதேச அழைப்பு அட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புலனற்றோருக்கு லயன்ஸ் கழகம் உதவி

வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி வடமராட்சியைச்சேர்ந்த விழிப்புலனற்றோருக்கு வடமராட்சி லயன்ஸ் கழகம் உடுபுடைவைகளையும் ஒருதொகைப் பணத்தையும் வழங்கியது.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் லயன் டாக்டர் எம்.தங்கராசா தலைமையில் வெள்ளைப் பிரம்பு தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் வைத்து விழிப்புலனற்றோருக்கு உடுபுடைவைகளும் ஒரு தொகைப் பணமும் வழங்கப்பட்டன. (202)

O/Lமாணவர்களுக்கான கருத்தரங்கு (Seminar)

விஞ்ஞான பாடத்தில்

பௌதிகவியல் (Physics)

பகுதி முழுதாக ஆராயப்படும்

ஆசிரியர்: **R.குகன் (B.Sc.)**

இடம்: **NEW SCIENCE HALL**

(கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்)

ஆரம்பம்: **27-10-2006 (வெள்ளி)**

2.30-4.00 **(p.m.)**

நேர அட்டவணை

27.10.2006	(வெள்ளி)	2.30 - 4.00 p.m.
01.11.2006	(புதன்)	2.30 - 4.00 p.m.
08.11.2006	(புதன்)	2.30 - 4.00 p.m.
15.11.2006	(புதன்)	2.30 - 4.00 p.m.
22.11.2006	(புதன்)	காலை 8 மணியிலிருந்து ஒரு மணிவரை.

✱ உங்கள் விஞ்ஞான ஆசிரியரிடம் அனுமதி பெற்று, உங்கள் கற்கைநெறி நேர அட்டவணையை சாதகமாக ஒழுங்குபடுத்தி, முற்கூட்டியே NEW SCIENCE HALL நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு அனுமதிகளைப் பெறவும்.

(54571) **- நிர்வாகி.**

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 1925 - 03 - 27

உதிர்வு 2006 - 09 - 22

திருமதி மாணிக்கம் வல்லிபுரம்

"அன்பின் திருவுருவமே! ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உன் அன்பு போலாகுமா? அம்மா உங்களைக்காண
இப்பூவுலகில் வந்து பிறக்கமாட்டீர்களா?
மாதம் ஒன்று ஓடினாலும் உம் நீண்ட துயில்
நீங்கிடுமா எம் வேதனைதான் தீர்ந்திடுமா?

கடந்த 22.09.2006 அன்று இறைவனடி சேர்ந்த எம் இல்லற விளக்கு மாணிக்கம் வல்லிபுரத்தின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னாரின் இல்லத்தில் இன்று (22.10.2006) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

32, முத்த விநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (54564) தகவல்: **குடும்பத்தினர்.**

மரண அறிவித்தல்

முருகேசு இராசரத்தினம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசரத்தினம் நேற்றுமுன்தினம் (20.10.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் நவநீதன் (கனடா), நந்தினி (கனடா), நளினி (கனடா), நவசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கீதா, சாந்தபவான், நகுலேஸ்வரன், சாந்தி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மீனாட்சி, கந்தசாமி, சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி, மகேந்திரம், மாணிக்கவாசகர், மகேஸ்வரன், சிவபுண்ணியம், பரமேஸ்வரி, லதா, வசந்தன் ஆகியோரின் மைத்துனரும், சந்தியா, சனகன், மிதுரன், ரதன், நிவேதா, நிதுஷா, தனுஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.10.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவபூதவராயர் கோயிலடி, உரும்பிராய் கிழக்கு. (54570) தகவல்: **குடும்பத்தினர்.**

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தில் பங்கீட்டுக்கு அரிசி

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் 33 கிளைகளிலும் அரிசி மேலதிகமாக பங்கீட்டு வழங்கப்படவிருக்கின்றது. ஒருவர் மற்றும் இருவர் கொண்ட குடும்பத்துக்கு இரண்டு கிலோ அரிசியும் -

மூன்று உறுப்பினர்களையும் அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட குடும்பத்துக்கு மூன்று கிலோ அரிசியும் - வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் வசதி கருதி தினமும் பிற்பகல் 4 மணிக்குப் பின் அவர்களுக்கு விநியோகத்தை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

வல்வை ஆஸ்பத்திரியில் இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.22

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள் தெரிவித்துள்ளார்.

இரத்தத்தைச் சேகரிப்பதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் வருகைதரவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (1-203)

பிரியாவிடை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.22

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் பணிபாற்றிய டெனிஸ் செஞ்சிலுவை சமூக உளவியல் பிரதிநிதி ஹரின் எரிக்ஸனிற்கான பிரியாவிடை நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கத்தின் யாழ். கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

வீடும் காணியும் விற்பனைக்குண்டு

மானிப்பாய், கட்டுடையில் ஆறு பரப்புக் காணியும் அதோடு சேர்ந்த எல்லா வசதியும் கொண்ட ஆறு அறை வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

எஸ்.எஸ்.கே.இளங்கமணன்
சமாதான நீதவான்.

விடு விலாசம்: பு.எஸ்.எச்.சி.ஆர். தண்ணீர் தாங்கி வீடு, கட்டுடை, மானிப்பாய் (சண்முகம் கடைக்கு முன்பாக).

D.C.M.

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2007 2008

கலை, வர்த்தக வகுப்புகள்

இன்று 22-10-2006 (ஞாயிறு)
காலை 8 மணிக்கு ஆரம்பம்.

A/L Day CLASS

23-10-2006 (திங்கள்)
காலை 9 மணிக்கு ஆரம்பம்

(54578) இயக்குநர் **S.வரதராஜன்**

காணி விற்பனைக்கு

யாழ். திருநெல்வேலிச் சந்திக்கும் முட மாவடி சந்திக்கும் இடையில் மேலையடிக்கு அருகில் றோட் டுக்கரையில் உள்ள கிணறு உட்பட 7½ பரப்புதோட்டக்காணி விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு:

T.P.: 0776687824

31ஆம் நாள் நினைவஞ்சலி

மகாலிங்கம் யோகநாகேஸ்வரி

(அரசமணி)

பிறப்பு: 25-09-1944 இறப்பு: 22-09-2006

அன்னையாய், தாயாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்திட்ட எம்தாயே
மாதம் ஒன்று சென்றாலும்
மாறாது எம்துயரம்.

(54579)

இன்று (22.10.2006) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் [illegible] அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

[illegible] **குடும்பத்தினர்.**

பரிசுத்த ஆவிக்கு செயம்

எல்லா நன்மைத் தனங்களுக்கும் ஊற்றாகிய தேவனே! உமக்கு நன்றி!!

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின்மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி!!

(54572) - அடியான்.

நெஞ்சகலா நினைவலைகள்

7ஆம் ஆண்டு 6ஆம் ஆண்டு

அமரர் **சின்னப்பா** திருமதி **ஜெயமலர்**

பொன்னுத்துரை தர்மபாலன்(தங்கர்)

20✱10✱1920 தோற்றம் 30✱06✱1958
22✱01✱1999 மறைவு 28✱10✱2000

திதி: 22.10.2006

ஏழாண்டுகள் கடந்து விட்டன
பிரிவுத்துயர் தாங்க முடியவில்லை
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள் அகலாதே.

அன்பு காட்டிய தங்களே!
உந்தன் நினைவுகளால் எந்நாளும்
வெந்து நொந்து தவிக்கிறோம்
உங்கள் நினைவு எம் நெஞ்சை
விட்டு நீங்காது.

பலாலி வீதி, உரும்பிராய். (54575) அம்மா மற்றும் உறவினர்கள்.

மரண அறிவித்தல்

செல்வி அனித்தா தருமலிங்கம்

கோப்பாய் தெற்கு, பழைய தபாற்கந்தோரடியைச் சேர்ந்தவரும் கோப்பாய் கிறிஸ்தவ பாடசாலையின் பழைய மாணவியும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவரும் வெள்ளவத்தை Micro PC system இல் வேலை செய்தவருமான செல்வி அனித்தா தருமலிங்கம் 19.10.2006 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தருமலிங்கம் - யோகமலர் தம்பதியரின் அன்பு மகளும் சுஜீந்திரன் (லண்டன்), காந்திமதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிந்துஜா (லண்டன்), மதிவதனன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் யோகநாதன் (ஜேர்மனி), யாழ்ப்பாணத்திலுள்ள தையல்நாயகி அம்மா, நவமணி, கமலாதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் மருமகளும் ஆறுமுகசாமி (இளைப்பாறிய பொலீஸ் அலுவலர்), யோகலிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்), சுசீலா தேவி (கனடா), தமயந்தி (ஜேர்மனி), பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் ஆரணியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (22.10.2006) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நாளை (23.10.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

011-2723118 தகவல்: **தாய், தந்தை.**(கொழும்பு).

(சி/51207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் முயற்சியை ஒன்றுபட்டு எதிர்ப்போம்

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக உயர்நீதி மன்றம் கடந்த 16 ஆம் திகதி வழங்கிய தீர்ப்புக் குறித்து தென்னிலங்கையில் பேரினவாதிகள் குதித்துக் கொண்டாட்டம் இடுகின்றார்கள்.

தமிழர் தாயகம் இணைக்கப்பட முடியாது, துண்டுபட்டே இருக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டதாக அவர்கள் துள்ளிக் குதிக்கின்றார்கள்.

உண்மையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அதுவல்ல.

வடக்கு - கிழக்கு இணைக்கப்படக் கூடவே கூடாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லை.

அப்படி உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவும் முடியாது.

வடக்கும் கிழக்கும் இப்போது - இதுவரை- இணைக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை முறை தவறானது என்றே அதன் தீர்ப்பு அமைந்திருக்கின்றது. அதேசமயம் சரியான நடவடிக்கை ஏற்பாட்டு முறைமூலம் இணைப்பு மேற்கொள்ளப்படுவதை தவறு என்று கூறமுடியாது என்பதையும் நீதிமன்றம் கோடி காட்டத் தவறவில்லை.

ஆக, தவறான நடவடிக்கை முறை மூலம் இணைப்புச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதால் அதன் காரணமாக கிழக்கு மக்களின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என்ற சட்ட வாதத்தையே நீதிமன்றம் முன்நிறுத்தியிருக்கின்றது.

தமிழர் தாயகத்தை துண்டாடும் எந்த ஏற்பாட்டுக்கும் தமிழர்கள் இணங்க மாட்டார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகட்டும் - அல்லது அவர்கள் பக்கத்தில் அணிதிரண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை இயக்கம் ஆகியவையாகட்டும் - அல்லது புலிகளுக்கு எதிர்த் திசையில் நிற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, வரதராஜப் பெருமாள் தரப்பின் ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) அணி போன்றவையாகட்டும் - அல்லது ஆனந்தசங்கரி, கலாநிதி விக்னேஸ்வரன் போன்றவர்களாகட்டும் - தமிழர் தரப்பில் எவருமே தமிழர் தாயகத்தை கூறுபோடும் பேரினவாதத்தின் சதித் திட்டத்துக்கு இணங்க மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

எனினும், பிரதேசவாதம் கிளப்பி அதனடிப்படையில் தீவிரவாத அரசியல் முன்னெடுக்க முயலும் கருணா குழு, சில சமயங்களில் சுயலாபம் தேடி தமிழர் தாயகத்தை துண்டாடும் கேவலத்துக்கு துணை போகக் கூடும்.

ஆனால், அக் குழுமத்தைத் தவிர, தாயக ஐக்கிய விவகாரத்தில் தமிழர் தரப்பு ஒரே நிலைப்பாட்டில் தான் இருக்கும் என்பது உறுதி.

வடக்கு- கிழக்கு இணைப்பைத் துண்டிக்கும் உயர் நீதி மன்றத் தீர்ப்பு அமெரிக்காவையே கவலையடைய வைத்திருக்கிறது.

''இத் தீர்ப்பு பொருத்தமற்ற சமயத்தில் வந்திருக்கும் துரதிஷ்ரவசமான நடவடிக்கை. இரு தரப்பு அமைதிப் பேச்சுகளுக்கு இணைப்புத் தான் அடிப்படையான விடயம்'' - என்று இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விடயங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்க செயலாளர் றிச்சட் பௌச்சர் கொழும்பில் வைத்துக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவினது மாத்திரமல்ல, இணைத் தலைமை நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடும் கூட இதுதான்.

''வடக்கு - கிழக்குக்கான விசேட ஏற்பாடுகளை மாற்ற முயலக்கூடாது. அப்படி மாற்றுவது அமைதியை எட்டுவதற்கான சமாதான முயற்சிகளில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்'' - என்று உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே - தனது ஆகப் பிந்திய கடைசி அறிக்கையில், அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றை உள்ளடக்கிய இணைத்தலைமை நாடுகள் இதனையே எச்சரித்திருந்தன.

எனவே, தமிழர் தாயகம் துண்டாடப்படக் கூடாது என்ற தமிழர் தரப்பின் ஒன்றுபட்ட - ஏக - நிலைப்பாட்டை - சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த அம்சத்தை - வற்புறுத்தி, அதை நிலைநாட்டுவதற்காக வலியுறுத்திப் போராடுவது தமிழினத்தின் தலையாய கடமையாகின்றது.

அந்த நடவடிக்கையின் ஆரம்ப கட்டமாகவே கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் மேற்கொண்ட போராட்டத்தையும், அதன் தொடர்பாக எதிர்வரும் புதனன்று வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் தமிழர் தேசம் நடத்தப்போகும் ஹர்த்தாலையும் கொள்ள வேண்டும்.

தமிழர் தரப்பின் போராட்டமே தமிழர் தாயகத்தின் உரிமையையும், விடுதலையும், கௌரவ வாழ்வும், சுதந்திரமும் பற்றியதுதான். அதாவது, ஈழத்தமிழர்கள் நடத்தும் இந்த விடுதலை வேள்வியின் ஆன்மாவே - அடிப்படையே-ஒன்றுபட்ட தமிழர் தாயகம் என்பதுதான். அதைத் துண்டாடிக் கொண்டு - தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதறடித்துக் கொண்டு - அமைதித் தீர்ப்பு ஒன்றை எட்டலாம் எனக் கொழும்பு எண்ணுமானால் அது படுமுட்டாள் தனமின்றி வேறில்லை.

அவ்வாறு தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதறடிக்க முயற்சிப்பது தமிழர்களின் அடிப்படை இலட்சியத்தில் - கோட்பாட்டின் - கைவைக்கும் வேலை.

அது மட்டுமல்ல, ஒன்றுபட்ட தமிழர் தாயகம் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் தான் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த ஏழு சுற்று அமைதிப் பேச்சுகளும் நடந்திருக்கின்றன. 2002 இறுதியில் நோர்வே பேச்சை அடுத்து வெளியிடப்பட்ட 'ஒஸ்லோ அறிக்கை' இதை நிரூபிக்கும் நல்ல ஆவணச் சான்று.

ஆகவே, அந்த அடிப்படையை முறியடிக்க முயல்வது இதுவரை நடைபெற்ற அமைதிப் பேச்சுகளின் அடிப்படையைக் குழப்பும் நடவடிக்கையும் கூட.

எனவே, தமிழர் தாயகத்தை கூறுபோட எத்தனிக்கும் தென்னிலங்கையின் முயற்சிகளுக்கு எதிராக தமிழர் தரப்பு அணிதிரண்டு போராடுவது தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகின்றது.

சந்தர்ப்பவாத அரசியலைக் கைவிட்டு சகலரும் சமஷ்டித் தீர்வுக்காக ஒன்றிணைய வேண்டும்

கண்டி மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இலங்கை அரசியலரங்கில் மூத்த அரசியல்வாதியாகக் கருதப்படுபவர். தற்போது அரசுக்கும் ஐ.தே.கட்சிக்குமிடையே இணக்கப்பாட்டுடன் செயற்படுவது தொடர்பான பேச்சுகளின் முடிவில் அதற்கான ஒப்பந்தமொன்றில் இருதரப்பினரும் கையெழுத்திடும் நிலைவரை முயற்சிகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

இவை தொடர்பாகவும் சமகால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாகவும் ''லங்காதீப'' பத்திரிகைக்கு லக்ஸ்மன் கிரியெல்ல வழங்கிய பேட்டியின் தமிழ் வடிவம் இங்கே தரப்படுகிறது.

கேள்வி: நாட்டில் தற்போது முக்கியத்துவம்மிக்க ஸ்திரமற்ற அரசியல்நிலை நிலவுகின்றது. இதுகுறித்த தங்களது கருத்தென்ன? அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனா ஐ.தே.கட்சி, அரசுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள முன் வந்துள்ளது? வடபகுதி யுத்தம், சமாதானப் பேச்சுகள் மற்றும் வாழ்கைச்செலவுச்சுமை ஆகிய பல தரப்பட்ட விடயங்கள் குறித்த தங்கள் கருத்தென்ன?

பதில்: நாட்டின் ஸ்திரமற்றநிலை குறித்த தங்கள் கருத்துச் சரியானதே. அரசியல், சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் பாரிய வீழ்ச்சியும் பின்னடைவும் நிலவுகின்றது. பாய்சேதமுற்ற வள்ளம் போன்று அரசு தத்தளிக்கிறது. அதே வேளை, அரசுடன் இணைந்து செயற்பட்டுவந்த கட்சிகள் அரசின் காலைவாரி விடுகின்றன. அக்கட்சிகள் தற்போது வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்துள்ளன.

பொதுமக்களால் சுமக்கஇயலாத அளவுக்கு வாழ்க்கைச் செலவுப் பளு உயர்ந்து செல்கின்றது. நாட்டின் பொதுமக்களதும் நாட்டினதும் வருமானம் வீழ்ச்சிகண்டுள்ளது. நாடும் நாட்டு மக்களும் சிறைப்பட்ட நிலையில் ஸ்தம்பிதநிலை உருவாகியுள்ளது.

வாய் வார்த்தைகளால் பிரச்சினைளுக்குத் தீர்வு தெரிவித்தவர்கள் எவரும் நாட்டின் இன்றைய நிலைக்குப் பொறுப்பேற்க முன்வருவதில்லை.

சமாதானப்பேச்சுகள் முன்னெடுக்கப்படுமா என்பது குறித்து உறுதி செய்துகொள்ள இயலாதுள் ளது. திட்டமிடப்படாது நினைத்த விதத்தில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் காரணமாக முகமாலை - நாகர்கோவில் போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கான படையினர் உயிரிழக்கநேர்ந்துள்ளது. மஹிந்த சிந்தனைத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களில் ஏதாவது ஒன்றாவது நிறைவேற்றப்பட்டதா?

அப்பாவிப் பொதுமக்களது உணர்வுகளைத் தூண்டி, பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள இயலும். ஆனால், நாட்டை நிர்வகிப்பது சிரமம்மிக்கதாகும். இது அரசியலில் இன்று நிதர்சனமாகியுள்ளது. அன்று ஐ.தே.கட்சியின் கொள்கைகளை விமர்சித்தவர்கள் இன்று அவற்றை ஒவ்வொன்றாக ஏற்கவேண்டி நேர்ந்துள்ளது. பாய் அற்ற நிலையில் பயணிக்கும் கப்பல் போன்ற நிலையிலுள்ள இந்த அரசால் இத்தனை பிரச்சினைகள் நிலவும் நாட்டை எவ்வாறு முன்னேற்ற இயலும்?

இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தீர்வு காண்பது பெறுமதியானது

கேள்வி: நீங்கள் கூறுவதுபோல பாய் இல்லாது சிரமத்துடன் பயணிக்கும் அரசுடன் ஐ.தே. கட்சி எதற்காக இணக்கப்பாடொன்றை எட்டமுனைகிறது? இணக்கப்பாடு தொடர்பான பேச்சுகள் வெற்றியடைந்து ஒப்பந்தம்கூட விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது அல்லவா?

பதில்: தற்போது எதிர்க்கட்சியாக இருந்தபோதிலும் நாட்டின் மிகப் பெரிய கட்சி ஐ.தே.கட்சியாகும். இந்த நாடு குறித்தும் நாட்டுமக்கள் குறித்தும் ஐ.தே.கட்சிக்குப் பாரிய பொறுப்பு உள்ளதால் நாட்டின் இன்றைய சிறைப்பட்ட நிலையிலிருந்து நாடு விடுபட உதவவேண்டிய பொறுப்பு ஐ.தே.கட்சிக்கு உண்டு. இது அரசுக்கு ஆதரவு வழங்குவதாக அல்லாது, நாட்டின் மீதும் நாட்டுமக்கள் மீதும் கொண்டுள்ள பற்றுக்காரணமாக மேற்கொள்ளப்பட்ட முடிவு இது வாகும்.

பிரதான கட்சிகள் இரண்டினதும் மத்தியில் இத்தனை இணக்கப்பாடு உருவாகுவதை நான் மிக உயர்வான செயற்பாடாகக் கருதுகிறேன். நாட்டுமக்களில் பெரும்பாலோரும் இதற்காகப் பிரார்த்தித்து வந்துள்ளனர். நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு இந்த இணக்கப்பாட்டினூடான செயற்பாடுகளால் தீர்வு காண்பது இலகுவாக அமையும் என நம்புகிறேன்.

நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பெறுமதிமிக்கதாய் அமையும் என விடுதலைப் புலிகள் அமைப்புக்கூட கருத்து வெளியிட்டு வந்துள்ளது. இவ்விதம் ஒரு நாட்டின் முக்கிய கட்சிகள் இணைந்து முன்னேற்றகரமான அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் நிகழ்வுகள் வேறு பல நாடுகளிலும் இடம் பெற்றுள்ளன.

வேறு நாடுகளிலும் நடைபெற்றுள்ளது

அந்தவகையில் ஜேர்மனி மற்றும் ஒஸ்ரியா ஆகிய நாடுகள் அண்மையில் செயற்பட்டுள்ளன. வட அயர்லாந்தின் தீவிரவாதப் பிரச்சினையில் பிரிட்டனின் முக்கிய கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து செயற்பட்டிருந்தன. இலங்கையில் உள்ளது போலவே பிரிட்டனிலும் பிரதான கட்சிகள் இரண்டும் தீவிரவாதப் போராட்டம் தொடர்பாகத் தம்மிடையே தசாப்த காலங்களாக எதிர்எதிரணித் தரப்பாகப் பாராளுமன்றில் ஈடுபட்டுவந்தன. 40 ஆண்டுகள் காலத்துக்குப் பின்னர் இவ்விரு பிரதான கட்சிகளும் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தம்மிடையே ஒத்த கருத்திணக்கத்துக்கு வரநேர்ந்தது.

தற்போது எமது நாட்டுக்கும் அத்தகைய நிலையே ஏற்பட்டுள்ளது. நாட்டின் நலன்கருதி இரு பிரதான கட்சிகளும் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமாக இதைக் கொள்ள இயலும். விசேடமாக ஐ.தே. கட்சிக்கு இந்த விடயத்தில் பெரும் கௌரவம் வழங்கப்படவேண்டும். அரசு தற்போது விடுதலைப் புலிகளுடன் சமதானப் பேச்சுகளை மேற்கொண்டு தீர்வுகுறித்த தீர்மானத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல்வேண்டும். அத்தகைய தீர்மானம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படும் வேளையில் அதற்கு ஆதரவாக நான் ஒரு கையை மட்டுமல்ல, இரு கைகளையுமே உயர்த்தி ஆதரவளிக்கத் தயாராய்உள்ளேன்.

ஐ.தே.கட்சி அரசால் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் மட்டுமன்றி சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சிலரும் எதிர்த்து வந்தனர். ஐ.தே. கட்சி அத்தகைய சந்தர்ப்பவாத நடவடிக்கையை மேற்கொள்ளாது, எதிர்க்கட்சியாக இயங்கியபோதிலும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசுக்கு உதவ முன் வந்துள்ளமை எவரது கௌரவத்துக்கும் பாத்திரமாகத்தக்க செயற்பாடாகும்.

இளைஞர்களை யுத்தத்தில் இனியும் பலிகொடுக்க முடியாது

கேள்வி: அமைச்சுப் பதவிகளை ஈட்டிக்கொள்ளும் விருப்புடன் ஐ.தே.கட்சியில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கவே இருக்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. அமைச்சுப் பதவிகளை ஏற்பதற்கு ஐ.தே.கட்சி பின்னடிக்குமானால், அத்தகையோர் வேறு மாற்று வழிகள் மூலம் அரசில் இணைந்து பதவிகளையும் பெறுவார்களானால் நிலைமை என்னவாகும்?

பதில்: ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் தனிப்பட்ட ரீதியில் அமைச்சுப் பதவிகளைப் பெற விரும்புகிறார்களா? இல்லையா? என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் ஒன்றைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஐ.தே.கட்சியிலுள்ள ஒரு தரப்பினர் ஐ.தே. கட்சி சிறந்த முறையில் புனரமைப்புக்கு உட்படுத்தப்படவில்லையெனக் குற்றம் சாட்டுகின்றனர். அதன் காரணமாகவே அரசில் இணைந்து கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அவ்விதம் கட்சி நியாயமான முறையில் புனரமைப்புச் செய்யப்படாவிட்டால் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் அதற்குப் பொறுப்பு வாய்ந்த தலைவர் அதற்கான விளக்கத்தை தெளிவுபடுத்த வைக்கும்வகையில் உரியவேளையில் உரிய தரப்பிடம் தமது ஆட்சேபனையை இத்தகைய அதிருப்தியாளர் குழு முன்வைக்க இயலும். முகத்தோடு கோபித்துக் கொண்டு மூக்கை வெட்டியெறியும் செயற்பாடு போன்று இத்தகைய அதிருப்தியாளர் குழு அரசுடன் இணைந்து கொண்டால் பிரச்சினைக்கு உண்மையான தீர்வை எவ்வாறு ஈட்டிக் கொள்ள இயலும் ?

சமஷ்டி அமைப்பே உகந்தது

இறுதியாக இந்த நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டிய விடயமொன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக் கொண்ட கருணாவும் ஆனந்தசங்கரியும் கூட இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். ஐ.தே.கட்சி இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறை நிர்வாகமே உரிய தீர்வாகும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வரை சுதந்திரக் கட்சியும் அத்தகைய நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. ஒஸ்லோவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் அமைப்பும் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு இணக்கம் தெரிவித்திருந்தது. அதே வேளை சர்வதேச சமூக நாடுகள் கூட சமஷ்டி அதிகாரப் பகிர்வு மூலம் பிரச்சினைக் குத்தீர்வு காணுமாறு எம்மை வற்புறுத்திவருகின்றன. ஆதலால் தாம் தற்போது எமது சந்தர்ப்பவாதப்போக்கை கை விட்டு, பொய்களைப் புறமொதுக்கி உண்மையின் பக்கம் கவனம் செலுத்தி பிரச்சினைக்கு தீர்வு காண முயலவேண்டுமென வேண்டிக்கொள்ள விரும்புகிறேன்.

இளைஞர்களை இனியும் யுத்தத்தில் பலிகொடுக்க முடியாது

இனிமேலும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை யுத்தத்துக்குப் பலிகொடுக்கமுடியாது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் எதிர்காலம் என்பவை நாசமுற அனுமதிக்க இயலாது. இன்று ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரு தரப்பினர் மட்டுமே தென் பகுதியில் சமஷ்டி முறைத் தீர்வுக்கு எதிராகக் குரலெழுப்பிவரும் தரப்பினர்களாக செயற்படுகின்றனர்.

ஐ.தே.கட்சி முன்வைத்துள்ள ஆறுவிடயங்கள் தொடர்பாக அரசுடன் கைகோர்த்து செயற்பட்டாலும் அரசின் வரவு- செலவுத்திட்டத்துக்கு ஆதரவுவழங்குவோம் என வாக்குறுதி எதனையும் நாம் வழங்கியிருக்கவில்லை. ஐ.தே.கட்சி தற்போதுஉறுதி மொழியொன்றை வழங்கியுள்ளது. நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொறுப்பு அரசின் கைகளிலேயே உள்ளது. தற்போது வாய்த்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகாண அரசினால் இயலாதுபோனால், பின்னர் ஒருபோதிலும் அதனை அவர்களால் நிறைவேற்ற இயலவே இயலாத தொன்றாகிவிடும்.

அரசு - ஐ.தே.க. இணக்கப்பாடு எதற்காக? விளக்குகிறார் மூத்த அரசியல்வாதி கிரியெல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெல உறுமயவின் முக்கிய பிரமுகர்கள் ஜனாதிபதியுடன் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஒக்.22

ஜாதிக ஹெல உறுமய மற்றும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து சமகால நிலைவரம் குறித்துப் பேச்சு நடத்தியது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜாதிக ஹெல உறுமய மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐக்கியதேசியக் கட்சியுடன் தற்போது இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் தொடர்பாக, வும் எதிர்காலத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

தேசியப் பிரச்சினை தொடர்பான விடயங்களில் அரசதரப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரமுகர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் விளக்கிக் கூறினார் என்றும் - ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் அஞ்சலகத்தை இடம்மாற்ற நடவடிக்கை

தென்மராட்சி, ஒக்.22

கொடிகாமம் நகர்ப்பகுதியில் இயங்கும் கொடிகாமம் அஞ்சல் அலுவலகம், எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரியவந்தது.

மேற்படி அலுவலகங்களை அண்டிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததையடுத்து இவற்றினை இடம் மாற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்திற்கு உட்பட உப அஞ்சல் அலுவலகங்கள் சில மூடப்பட்டு வேறு இடங்களில் இயங்குவதாகவும் - கூறப்பட்டது.

கால்நடைகளால் பயிர்கள் அழிக்கப்படுவதாக முறைப்பாடு

வடமராட்சி, ஒக்.22

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் வரணி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில்இருந்து வடமராட்சிக்கு வந்து சேர்ந்துள்ள கால்நடைகளால் தோட்டப்பயிர்கள் அழிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பகுதிகளில்இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தாம் இடம்பெயரும் போது தமது கால்நடைகளை அவிழ்த்து விட்டு வெளியேறியுள்ளனர் என்றும் -

இவ்வாறு வடமராட்சிக்குள் வந்து சேர்ந்துள்ள கால்நடைகள், அல்வாய், மாலுசந்தி ஆகிய இடங்களில், தோட்டங்களில் உள்ள பயிர்களை அழித்து வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(182)

பூவரசம்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதல் நடத்தப்பட்டது என்றும் பொலீஸார் நடத்திய பதில் தாக்குதலையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிவிட்டனர் என்றும் அந்த நிலையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்ற அதேசமயத்தில், இந்து மக்களின் நுயரங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுகின்றோம்.

கடந்த சில மாதங்களாக வடபகுதியிலிருக்கும் மக்களுக்கு உணவும், அடிப்படைத் தேவைகளும் மறுக்கப்பட்டு வருகின்றன. அதேசமயத்தில் அப்பாவி மக்களின் கொலைகளும் கடத்தல்களும் நாடெங்கும் தொடர்கின்றன. அண்மையில் கடத்தப்பட்டவர்களுள் இந்து ஆலய மதகுருவும் ஒருவர் என்பது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும். மேலும் நாட்டில் இனவாதம் பரப்பப்படுகின்ற நிலையும் உருவாகியிருக்கிறது. சகல கொலைகளையும் வன்செயல்களையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தாமதமின்றி - உடனடியாகவே ஏ-9 பாதையைத் திறக்குமாறும், வடபகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களையும் நாட்டின் பிரசைகளாகக் கருதி, அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை மேலும் தாமதிக்காது வழங்குமாறும் வேண்டுகிறோம். தற்பொழுது வடபகுதியில் அத்தியாவசியப் பொருட்கள் பங்கீட்டு முறையில் - பாகுபாடு உணர்வுடன் வழங்கப்படுவதாக தெரியவருகிறது. அத்தகைய அடிப்படை மனித உரிமை மறுப்புகள் இந்த நாட்டில் சமாதானச் சூழ்நிலையை உருவாக்கமாட்டாது.

சந்திரிகாவுக்கு மேலதிக பாதுகாப்பு: 'ராவய' ஆசிரியரின் வழக்கு வாபஸ்

கொழும்பு, ஒக்.22

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சட்டத்துக்கு முரணான வகையில் மேலதிக பாதுகாப்பு வழங்குவதற்கு தற்போதைய அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிராக 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்ரர் ஐவன் தாக்கல் செய்திருந்த மனுவை தாம் வாபஸ் பெறுகின்றார் என அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்திருக்கின்றார்.

ஓய்வுபெறும் ஜனாதிபதி ஒருவருக்கு, அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பே வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியின் உரிமைகள் தொடர்பான சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு குறித்த சட்டமூலத்திற்கு முரணான வகையில் மேலதிக பாதுகாப்பை வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் -

அது தவறானது என்று அறிவிக்கும்படியும் குறிப்பிட்டு குறித்த மனுவை விக்ரர் ஐவன் தாக்கல்செய்திருந்தார். அது குறித்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி குறித்த மனுவை தமது கட்சிக்காரர் வாபஸ்பெறுகிறார் என அறிவித்தார். (த-12)

ஒட்டோ சாரதிகள் இருவர் நீர்வேலி வடக்கில் கடத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.22

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இரு ஒட்டோ சாரதிகளை கடந்த புதன்கிழமை முதல் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த கந்தையா ஜேசுதாசன் (வயது 24), அச்சுதன் வைகுந்தன் (வயது 22) ஆகியோர் தொடர்பாகவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர்களின் வீட்டுக்கு வெள்ளை வானில் சென்றோர் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு இருவரையும் அழைத்துச் சென்றனர் என்றும்-

அவர்கள் குறித்துத் தகவல் இல்லை என்றும் - அவர்களது உறவினர்கள்தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

(1-79)

நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் டெங்கு நுளம்பை அழிக்கும் பணிகள்

சபையின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.22

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையில், டெங்கு நுளம்புகளை அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக, பிரதேச சபையின் செயலாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள கொக்குவில் பகுதியில் டெங்குக் காய்ச்சல் ஆரம்ப அறிகுறிகள் தென்படுவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தமையைத் தொடர்ந்து அப்பகுதியில் கடந்த வாரம் மலத்தியோன் மூலம் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாட்டிற்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார் - என்று அதில் உள்ளது.

மொனராகலையில் பாரிய தேடுதல் 35 பேர் சந்தேகத்தின் பேரில் கைது

கொழும்பு, ஒக்.22

மொனராகலையில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 35 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேடுதலின் போது ஒரு தொகுதி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை வைத்திருக்காமையை அடுத்தே மேற்படி 35 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும்-

நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த இந்த தேடுதல் நேற்றுக் காலை வரை தொடர்ந்தது என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

மேஜர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ள 55 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சனத் கருணாரட்ண கடமையாற்றி வருகிறார்.

இவரது பதவி உயர்வை அடுத்து 55 ஆவது படைப்பிரிவின் புதிய கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் கமால் குணரட்ண நியமிக்கப்பட்டார்.

தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைய அரசிற்கு ஆதரவுவழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கட்சிபேதங்களுக்கு அப்பாற்பட்டுச் செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

ஓமந்தை சூனிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின்போது செய்யப்பட்டதுபோன்று அரச ஹெலிகொப்டர் வசதி கிளிநொச்சியில் இருந்து வழங்கப்படமாட்டாது எனத் தெரிகின்றது.

மாறாக ஓமந்தையில் இரண்டு தரப்பினர்களுக்கிடையே கட்டுப்பாட்டு பகுதிக்கு இடையேயுள்ள யுத்தசூனியப் பிரதேசத்தில் இருந்தே புலிகளின் குழுவினர் ஹெலிகொப்டரில் புறப்படுவர். வழமைபோன்று பேச்சுக்குழுவினரை ஏற்றிச்செல்வதற்காக அரச ஹெலிகொப்டர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தரையிறங்க அரசுத் தரப்பில் அனுமதி வழங்கப்படவில்லை என்று அறியவருகிறது. எனினும், கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் வழியாக புலிகளின் குழுவினர் சுவிற்சர்லாந்து செல்வதற்கும் பின்னர் இதே வழியூடாக வன்னிக்குத் திரும்புவதற்கும் அவசியமான எல்லா பாதுகாப்பு வசதிகளும் வழங்கப்படும் என்று அரசுத் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. (ஐ)

கற்பிட்டியிலும் தேடுதல் 33 பேர் கைதாகினர்

கொழும்பு, ஒக்.22

கற்பிட்டி நாரக்கல்லை என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதலில் 33 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இந்த தேடுதல் நடவடிக்கை நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை மேற்கொள்ளப்பட்டது.

கைதான 33 பேரையும் எதிர் வரும் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறோம். அதுபோன்று இந்தத் தடவையும் வழங்குவோம். வடக்கு - கிழக்குக்கு வெளியிலும் கூட அவர்கள் தங்களது பயங்கரவாதச் செயல்களைத் தொடர்கின்ற நிலையிலும் நாங்கள் இதனைச் செய்வோம்'' என்று ரம்புக்வெல கூறியிருக்கிறார்.

''நாங்கள் ஒரு பலம்பொன்நாயக அரசு. ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல'' - என்றும் ரம்புக்வெல கூறினார்.

அரசுத் தரப்பின் இந்த உத்தரவாதம் நோர்வேத் தரப்பின் ஊடாகப் புலிகளுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ)

A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்
23.10.2006 Mon-8a.m
ACC : பாலகுஜன்
Mon-Fri 8.30-10.30
ECO : விக்கி
Tue-Thu 7.15 am
Ba.st : யசோ
Mon-Wed-Fri7.15 am
துவிப்பட கலைமை வெளிமாவட்ட கருத்தரங்கு பரீட்சை வகுப்பேடுகள் வழங்கப்படும்.
அதிவிசேட விந்திக்கு உத்தரவாதம்
BEACON - யாழ்
(வெலிங்டன் சந்தி அருகில்)

பல்கலை. அனுமதி விண்ணப்பப் படிவம் பெற கொட்டும் மழையிலும் மாணவர் காத்திருப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் விண்ணப்ப படிவங்களைப் பெறுவதற்காக நேற்று கொட்டும் மழையிலும் மாணவர்களும் பெற்றோர்களும் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

நேற்று பல்கலைக்கழக அனுமதிக்கான படிவங்கள் யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலையில்வைத்து விநியோகம் செய்யப்பட்டன. இந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் மாணவர்கள் காத்துநின்றதை அவதானிக்க முடிந்தது. (202-68)

மதகு சேதம்

தென்மராட்சி, ஒக்.22

பருத்தித்துறை வீதியில் நுணாவில் சந்திக்கு அண்மையில் உள்ள மதகு கடந்த வியாழக்கிழமை உடைந்தது. இதனால் கனரக வாகனங்கள் இவ்வீதியால் செல்வது நிறுத்தப்பட்டுள்ளது.

மழைகாலங்களில் நுணாவில் மேற்குப் பகுதி மழை வெள்ளம் இந்த மதகு ஊடாக நுணாவில் குளம் வாய்க்காலுக்குச் செல்லும். தற்போது பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் இம்மதகு உடைந்துள்ளமையால் வெள்ளநீர் தேங்கும் அபாயம் உள்ளது. (202)

ஆனைக்கோட்டையில் இன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ். லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9.30 மணிக்கு ஆனைக்கோட்டை, கூழாவடி அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் உயர் அழுத்தப்பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, சிறுநீர்ப்பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படுவதுடன் கண்பரிசோதனை நடத்தப்பட்டு பொருத்தமானவர்களுக்கு கண்ணாடி வழங்குவதற்கு ஆவண செய்யப்படுமென்று கழகத் தலைவர் டி.எஸ். லேனாட் அறிவித்துள்ளார். (185)

மருந்துக்கான பணத்தை திங்கள், செவ்வாய் தருமாறு சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.22

சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தின் மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்காக பெயர் பதிவு செய்த நோயாளர்களை அம்மருந்துக்குரிய பணத்தை நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் மாலை 3மணிக்கு முன்பாக செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1)

CHEMISTRY DAY CLASS
By: அன்பழகன் B.Sc
1.INORGANIC PAPER Mon - Fri 10.30-11.30 ஆரம்பம் 23/10
2.ORGANIC Mon, Fri 11.30 ஆரம்பம் 23/10
3.INORGANIC Wed, Thurs 11.30 ஆரம்பம் 26/10
4.அயன் சமனிலை Sat, Sun 10.30 ஆரம்பம் 28/10
5.SEMINAR Tue 10.30 ஆரம்பம் 24/10
வெளிமாணவர்களும் கலந்து கொள்ளலாம்
யாவும் ஒரேயொரு கட்டணத்தில்
NEW SCIENCE CENTER
யாழ். நகர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org